கே.கே.சி.பிரபாகரன் வரவேற்புரை!

அம்பாசமுத்திரம் நகரக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் சிறப்புரை!

நெல்லை, நவ.8-
நெல்லை மேற்கு மாவட்டம் அம்பாசமுத்திரம் நகர தி.மு.க.சார்பில் நடைபெற யிருக்கும் அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் சம்பந்த மாக பொது உறுப்பினர்கள் கூட்டம் நகராட்சி திருமண மண்டபத்தில் நகர அவைத் தலைவர் ஆறுமுக பாண்டி யன் தலைமையில் நகர் மன்ற துணைத் தலைவர் சுப்பிரமணியன் முன்னாள் அரசு வழக்கறிஞர் காந்தி மதி நாதன், மாவட்ட பிரதி நிதிகள் ராதா கிருஷ்ணன், அண்ணாதுரை,நகர துணை செயலாளர்கள் முத்து கி ருஷ்ணன்,தங்கம்,லோகநா யகி, பொருளாளர் சண்முக சுந்தரம் ஆகியோர் முன்னிலை யில் நடைபெற் றது.



தலைமை செயற்குழு உறுப்பினரும் அம்பை நகர செயலாளருமான கே.கே. சி.பிரபாகரன் வரவேற்றார். இந்நிகழ்வில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப் பாளர் இரா.ஆவுடையப் பன் பங்கேற்று கழக நிர்வா கிகளிடம் கருத்துக்களை கேட்டறிந்து,நடைபெற இருக்கும் அம்பை சட்ட மன்ற தொகுதி இடைத் தேர்தல் நமக்கு ஒரு நல்ல வாய்ப்பு முழுமனதுடன், ஒற்றுமை உணர்வுடன் செயல்பட்டு உதயசூரியன் சின்னத்திற்கு அதிக வாக்கு களை பெற்றுதந்து அமோக மாக வெற்றி பெறச் செய்து வெற்றி கனியை கழகத் தலைவர் அன்புத் தளபதி யார் அவர்களிடம் ஒப்ப டைக்க வேண்டும். என் றார்.

இதில் தலைமைச் செயற் குழு உறுப்பினர் ஆ.பிரபா கரன்,மாநில தொண்டர் அணி துணைச் செயலாளர் ஆறுமுகம்,மாநில விவசாய தொழிலாளரணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆ தித் தன் , மா வட் ட துணைச் செயலாளர் மைக் கேல்,

மாவட்ட ஊராட்சி மன்ற உறுப்பினர் சாலமன் டேவிட், அணி அமைப்பா ளர் பிரேம் ஆனந்த் மற்றும் சண்முகவேல், அமா னுல்லா,சாலமோன் ராஜ், பாலகிருஷ்ணன்,அனுசுயா கணேசன், அழகம்மை மாரி யப்பன்,கல்யாணி செந்தில் குமார்,ராமசாமி என்ற தாஸ், பேச்சிகனிஅம்மாள், மரியம்மாள் கணேசன்,லதா பிச்சை,ஜோதிகலா சிங்கநா தன்,முத்துகிருஷ்ணன்,சுப் பிரமணியன், கந்தசாமி, ஜோயல் ஹென்றி, காஜா முகைதீன்,சுவாமிநாதன்,

கணேசன்,சண்முகசுந்த ரம்,சண்முகநாதன்,பாலசுப் பிரமணியன்,சஞ்சய் செல் வம், கார்த்திக், மணி கண்டன், ரகுபதி,ராஜேஷ், சூர்யா,கார்த்திக்,மணிகண் டன்,ரகுபதி, சிவராம கிருஷ்ணன்,அருண்குமார் உள்பட நகர கழக நிர்வாகி கள்,கழகத் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்ட னர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட பொறியாளரணி துணை அமைப்பாளர் தின கரபாண்டியதுரை நன்றி கூறினார்.

த.வெ.க. அரசை எதிர்த்து – மின்கழகத் தொ.மு.ச. தலைமையில் அனைத்து மின்வாரிய தொழிற்சங்கங்கள்

நவம்பர் 11ல் மாநிலம் தழுவிய மாபெரும் வேலை நிறுத்தம்!

மின் கழகத் தொ.மு.ச. பொதுச்செயலாளர் பா.மணிமாறன் அறிவிப்பு!

சென்னை, நவ.8-
தமிழ்நாடு மின்வாரி யத்தை தனியார் மயமாக்க முயற்சிக்கும் த.வெ.க. அரசை கண்டித்து தமிழ் நாடு முழுவதும் மின்வாரிய அனைத்து தொழிற்சங்கங் கள், நவம்பர் 11ல் மாநிலம் தழுவிய மாபெரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிறார் கள் என மின்கழகத் தொமுச பொதுச்செயலா ளர் பா.மணிமாறன் தெரி வித்துள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு மின்கழகத் தொமுச பொதுச்செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை வருமாறு.,

தவெக அரசு பொறுப்பு ஏற்ற இந்த 6 மாதங்களில் தவறான அணுகுமுறை யால், தமிழ்நாட்டில் மின் வெட்டை ஏற்படுத்தி, மின் கட்டணத்தை உயர்த்தி, தமிழ்நாட்டில் ஏழை எளிய மக்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், சிறுகுறு தொழிலாளர்கள், தொழில் புரிவோர், வணிகர்கள், மற் றும் அனைத்து பிரிவு மக்க ளையும் வஞ்சிப்பதோடு, எதிர்கால தமிழகம் ஆன இளைஞர்களில் வாழ்வை யும் , வேலைவாய்ப்பையும் சிதைக்கின்றது.

தமிழ்நாட்டில் மின்உற் பத்தியை குறைத்து, மின்சா ரத்தை வெளிசந்தையில், மின்வாரிய வரலாற்றி லேயே இல்லாத வகையில் ரூ.37 மற்றும் ரூ.41.50 என ஒரு யூனிட்டிற்கு ஒப்பந்த புள்ளி இறுதி செய்து விட்டு தனியாருக்கு லாபம் நோக்கி மின்வாரியத்தை சீர்குலைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் மின் விநி யோகத்திலும், முழுமை யாக தனியாருக்கு வழங்க சுமார் 3 கோடி ஸ்மார்ட் மீட்டர்கள் வாங்க ஒப்பந் தம் போடப்பட்டுள்ளது. இது மின் விநியோகம் முற் றிலும் தனியாருக்கு போகும் பாதையாகும். தனியார் சொல்வதே மின் கட்டணம் என்கிற நிலை ஏற்படும். இதனால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப் படுவார்கள்.

தமிழ்நாட்டில் Fixed Term Employment (FTE) மூலமாக ஒப்பந்த முறை யில் 5 ஆண்டுகளுக்கு 10000 நபர்கள் பணியமர்த் தப்படுவார்கள் என்றும் அதை அமுல்படுத்திட தனி யார் நிறுவனத்திடம் வழங் கிள்ளார்கள். இது தற்காலி கமாக பணியாற்றிவரும் ஒப்பந்த தொழிலாளர்க ளுக்கு எதிரான நடவடிக் கையாகும். புதியதாக 10000 நபர்களை அத்தியாவசிய பணியான மின்துறையில் பணியமர்த்துவது என்பது அவர்களின் எதிர்காலத்தை யும், உயிர் பாதுகாப்பையும் கேள்விகுறியாக்கும்.

தமிழ்நாடு மின்வாரி யத்தில் புதியதாக துவங்க உள்ள மின் திட்டங்களான மின்உற்பத்தி நிலையங்கள் அமைத்தல், உயர் மின் அழுத்த வழிதடங்கள், துணை மின் நிலையங்கள் அமைக்கும் திட்டங்களை பொது தனியார் கூட் டாண்மை (Public private partnership) திட்டம் மற்றும் (Tariff/Based Competitve) திட்டத்தின் மூலம் அமுல்படுத்தப்படும் என்று தவெக அரசு அறிவித் துள்ளது. இது தனியாருக்கு மின்வாரி யத்தை தாரை வார்க்கும் செயலாகும்.

6 அம்சக் கோரிக்கைகள்!

பொதுத்துறை, அத்திய வாசிய துறையான மின்து றையை முழுவதுமாக தனி யாருக்கு வழங்கி, நிதி சுமையை பொதுமக்கள் மீது திணித்து அவர்களின் வாழ்வையும் கேள்விகுறி யாக்கும்.

இதனை எதிர்த்து கீழ்க் கண்ட 6 அம்ச கோரிக்கை களை வலியுறுத்தி,

1. மின்வாரியம் அறிவித் துள்ள ஸ்மார்ட் மீட்டர் திட்டத்திற்கான டெண்டர் அறிவிப்பை திரும்பப் பெறுக!

2.மின்உற்பத்தி, மின் வழித்தடங்கள் திட்டங் களை PPP முறையில் தனி யார் மயமாக்கும் முயற் சியை கைவிடுக!

3.5 ஆண்டு ஒப்பந்த Fixed Term Employment (FTE) முறையை திரும்பப் பெறுக!



4.அரசு ஊழியர்களுக்கு கிராஜுவிட்டி தொகை ரூபாய் 20 லட்சத்திலிருந்து ரூபாய் 25 லட்சமாக உயர்த் தியதை போன்று மின்வா ரிய பணியாளர்களுக்கும் உயர்த்தி வழங்கிடுக!

5.அரசு ஊழியர்களுக்கு குடும்ப நல நிதி ரூபாய் 3 லட்சத்திலிருந்து 5 லட்ச மாக உயர்த்தியதை மின்வா ரிய பணியாளர்களுக்கு 01.09.2021 முன் தேதியிட்டு வழங்கிடுக!

6. வாரிய ஆணை எண் 2ஐ ரத்து செய்திடுக.

இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி த.வெ.க. அரசை எதிர்த்து 11.11.2026ல் மாநிலம் தழுவிய மாபெரும் வேலை நிறுத்தம் நடைபெறுகிறது.

பொதுமக்கள் மற்றும் தொழிலாளர்கள் நலன் பாதுகாக்கும் திராவிட மாடல் ஆட்சி, தமிழ்நாட் டில் அனைத்து பிரிவு மக்க ளுக்கு பொற்கால ஆட்சி வழங்கிய நமது கழகத் தலை வர் அன்புத்தளபதி அவர் கள் முதலமைச்சராகப் பொறுப்பு வகித்த 2021 2026ல், மின்வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர் கள், பொறியாளர்கள் மற் றும் அலுவலர்களுக்கு பல சலுகைகளை வழங்கினார் கள். 5 ஆண்டுகளில் 2 முறை மின்வாரிய பணியாளர்கள் மகிழும் வண்ணம் சிறப் பான ஊதிய உயர்வை வழங்கினார்கள். மின்துறை யில் பணிபுரிகிறவர்களும், பணிஓய்வு பெற்றவர்களுக் கும் பணிபாதுகாப்பை உறுதி செய்யும் முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தினார் கள். அதிமுக ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஈட்டிய விடுப்பை காசாக் கிக்கொள்ளும் அனுமதி அளித்தார்கள். உடனுக்கு டன் அகவிலைப்படி உயர்வு, கருணைத்தொகை யுடன் போனஸ், பொங்கல் பரிசு என பல சலுகைகளை வழங்கினார்கள்.

கழகத் தலைவர் அவர்க ளின் ஆட்சியில் மின்வாரிய பணியாளர்களுக்கு பணிபா துகாப்பு உபகரணங்கள் மற் றும் மின் தடவாள பொருட் கள் வழங்கி, தமிழ்நாட்டு மக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்கி, தமிழ் நாட்டில் மின்வெட்டு இல் லாத மாநிலமாக ஒளிர வைத்தார்கள். பல மின் உற் பத்தி நிலையங்களை ஏற்ப டுத்தி மின்உற்பத்தியை பெருக்கினார்கள். மின்மாற் றிகள் பராமரித்து, புதிய மின் வழித்தடங்களை அமைத்தார்கள். இதனால் தடையில்லா மின்சாரம் பொதுமக்களுக்கு வழங்க முடிந்தது.

ஆய்வுக் கூட்டங்கள் நடத்தவில்லை!

த.வெ.க. அரசு பொறுப் பேற்றதிலிருந்து தொழிலா ளர்களுக்கு விரோதமாக செயல்பட்டு வருகிறது. ஆட்சிக்கு வந்த 6 மாதங்க ளிலேயே பல தரப்பட்ட மக்கள், மின்வெட்டு மற் றும் கடும் விலைவாசி உயர் வால் அவதிப்படுகிறார்கள். தினந்தோறும் பல மணிநே ரம் மின்வெட்டு ஏற்பட்டு பொது மக்கள் தூக்கத்தை தொலைக்கிறார்கள், நிம்ம தியும் இதனால் இழக்கிறார் கள். இதற்கெல்லாம் தீர்வு காணாமல், ரீல்ஸ் முதல்வர் வழக்கமாக மௌனம் காக் கிறார்கள். மின்துறை அமைச்சரே தினந்தோறும் பொய்யான பேட்டி அளித்து வருகிறார்கள். தவெக மின்துறை அமைச் சர் கடந்த ஆண்டு போல தீபாவளியில் மின்வெட்டு இருக்காது என்று கூறுகி றார். கடந்த ஆண்டு தீபா வளி தினத்தில் மட்டுமல்ல அனைத்து தினங்களும் மின் வெட்டு இல்லாத மாநில மாக தமிழ்நாடு மாநிலம் திகழ்ந்தது என்பது வரலாறு. இது தெரியாமல் தவெகஅ மைச்சர் பேசுவது தவறா னது.

மின்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் மின்வெட்டிற்கு தீர்வு காண இதுவரை உயர் அதிகாரிக ளுடன் முறையான ஆய்வுக் கூட்டங்கள் நடத்தவில்லை. தொழில் சங்கங்களுடன் பேச்சுவார்த்தையும் மேற் கொள்ளவில்லை. தான் தோன்றித்தனமாக செயல்ப டுகிறாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

கடந்த வாரம் மின்வா ரிய பணியாளர்களுக்கு 500 பேர்களை ஆந்திர மாநிலம் புயல் பாதித்தப்பகுதிக ளுக்கு அனுப்பிள்ளார்கள். தமிழ்நாட்டில் மின்வாரி யத்தில் பணியாட்கள் பற் றாக்குறை உள்ள நிலையில், இங்கிருந்து எதற்காக 500 தொழிலாளர்கள் அனுப்பி யுள்ளார்கள். அதுவும் தீபா வளிக்கு தொழிலாளர்கள் கு டு ம் ப த் தி ன ரு ட ன் கொண்டாட முடியாத சூழ் நிலை ஏற்படுத்தியுள்ளார் கள். இவர்கள் அனைவரும் மனஉளைச்சலில் உள்ளார் கள். தொழிற்நிறுவனங்க ளைதான் பக்கத்து மாநிலங் களுக்கு அனுப்பிவைக்கி றார் ரீல்ஸ் முதலமைச்சர் என்றால், நம் தொழிலாளர் களை பக்கத்து மாநிலத் திற்கு பணிக்கு அனுப்பி வைக்கிறார் மின்துறை அமைச்சர்.

தனியார் மயமாக்க முயற்சிகள்!

மின்துறையை தனியார் மயமாக்கும் முயற்சிகள், 70 ஆண்டுகால மின்வாரி யத்தின் எதிர்காலத்தையும், அதில் பணிபுரிகின்ற பணி யாளர்கள் மட்டுமின்றி, பொதுமக்களுக்கும் பெரி தும் பாதிப்பை ஏற்படுத் தும். இதனால் மின்சார வாரியத்தை பாதுகாக்கவும், மின்வாரிய பணியாளர் களை பாதுகாக்கவும், தனி யார் மயம் செல்வதை அனைத்து மின்வாரிய தொழிற்சங்கங்களும் வன் மையாக கண்டிக்கிறோம்.

எனவே, த.வெ.க. அரசு மின்வாரியத்தை தனியார் மயமாக்கும் முயற்சியை எதிர்த்து வரும் 11.11.2026 அன்று மின்சார வாரியத்தில் பணிபுரியும் அனைத்து தொழிலாளர்களும், மாநில தழுவிய மாபெரும் வேலை நிறுத்தில் ஈடுபடுகிறார்கள்.

இவ்வாறு மின்கழகத் தொ.மு.ச. பொதுச்செயலா ளர் பா.மணிமாறன் அறிக் கையில் தெரிவித்துள்ளார்.

தாம்பரம் மாநகர தி.மு.க. சார்பில் ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும்

கழகத் தோழர்கள் 2000 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள்!

டி.காமராஜ் ஏற்பாடு! மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா வழங்கி சிறப்புரை!

சென்னை, நவ.8-
தாம்பரம் மாநகர தி.மு.க. நடத்திய விழாக் கால தொகுப்புகள் வழங் கும் நிகழ்ச்சி 6.11.2026, வெள்ளிக்கிழமை காலை 11 மணி அளவில், ஆட்டோ தொழிலாளர்களுக்கும், மாலை 5 மணிக்கு கழக நிர் வாகிகள் தோழர்களுக்கும், மேற்கு தாம்பரம், துரை சாமி தெருவில் அமைந் துள்ள ராஜகோபால் திரு மண மண்டபத்தில் நடை பெற்றது.

இந்நிகழ்ச்சியில் தாம்ப ரம் மாநகரக் கழகச் செயலா ளர், தாம்பரம் மேனாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா கலந்து கொண்டு, அனைவருக்கும் சிறப்புத் தொகுப்புகள் வழங்கினார்.

கழகத் தலைவர் தளபதி, இளைஞர் அணி செயலா ளர் உதயநிதி அவர்களின், முன்னெடுப்புகளில், கழகத் தினர் ஒற்றுமையோடு செய லாற்றி, வெற்றி என்ற இலக்கை நோக்கி பயணித் திட,கருத்துகளையும்ஆலோ சனைகளையும் கூறி, சமீபத் தில் மறைந்த ஓரத்தநாடு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், எம்.ஆர்.ராமச் சந்திரன்,உள்ளிட்ட கழகத் தினர்க்கு இரங்கல் தீர்மா னம் நிறைவேற்றி அவர்களை, நினைவுகூர்ந்து உரையாற்றி னார்.


நிகழ்வில் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, எஸ்.இந்தி ரன், டி.ஆர்.கோபி, ஜா. ரவிக்குமார், ரா.செல்வ குமார், கி.வேல்மணி, எஸ். ஜி.கருணாகரன், ரமணி ஆதிமூலம், பி.ஜோதிகுமார், செ.சுரேஷ், எல்.பெரியநாய கம், இரா.செல்வகுமார், எம்.சீனிவாசகுமார், எல். பேகம், வி.கார்த்திக், எஸ். கார்த்திக், இரா.கந்தசாமி, மா.கன்னியப்பன், எம். கலைவாணன், எம்.ரவிக்கு மார், டி.ஆர்.நரசிம்மன், விஜிசிவகுமார், எஸ்.சரவ ணன், இரா.விஜயகுமார், சீ.செழியன், பாபு (எ) ஸ்ரீதர் குமார், எம்.வினோத், மு. விஜயன், ஆர்.சஞ்சீவி, கே. முருகன், கே.ரமேஷ்பாபு, கோமதி லோகநாதன், எல். ராஜன், பி.வி.ஏகாம்பரம், பிரஸ்க சேகர், கோ.ராஜேந் திரன், மங்களபுரம் பாபு, சித்திரம் ஜா.வாசுதேவன், மு.தினேஷ்குமார், க.அன் னம்மாள், ஜி.கலா, லோ. இலக்கியா மற்றும் மாநகர, பகுதி, வட்ட, நிர்வாகிகள், இளைஞரணி, மாணவரணி மகளிர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக மூத்த முன்னோடிகள் கலந் துக் கொண்டு சிறப்பித்தனர்.

இந்த சிறப்பான நிகழ்ச் சியை,பகுதி கழகச் செயலா ளர், மண்டலக்குழு தலை வர் டி.காமராஜ் ஏற்பாடு செய்து அனைவரையும் வர வேற்று வரவேற்புரை ஆற்றி னார்.

இரங்கல் தீர்மானம்

தஞ்சை ஒரத்தநாடு முன் னாள் சட்டமன்ற உறுப்பி னர், எம்.ஆர்.ராமச்சந்தி ரன், கிழக்கு தாம்பரம் வி. ராமுடு காஞ்சி வடக்கு மாவட்ட வர்த்தக அணி தலைவர் சிப்ஸ் மணி, பிரஸ் கே.சுந்தரம், வழக்கறிஞர் அணி இ.நடராஜன் அவர்க ளின் தாயார் இ.ரோஸ் பாய், 51வது வட்ட இளை ஞரணி பிரபு அவர்களின் தாயார் மாரியம்மாள், 54 ஆவது வட்டப் பிரதிநிதி முனுசாமி அவர்கள், 65 ஆவது வட்ட பன்னீர்செல் வம் மகன் பால் மனோவா, கழக முன்னோடி பன்னீர் செல்வம், 45வது வட்டம் டில்லிபாபு அவர்களின் தந்தை காசி என்கிற கரு ணாகரன், கோ.சம்பத் ஆகி யோர்களின் இறப் பிற்கு,ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்யா; அப்பழுக்கற்ற உயரதிகாரிகளை நாள் கணக்கில் கூட விட்டு வைக்காமல் மாறுதல் என்ற பெயரில் பந்தாடு கிறதாமே இந்த த.வெ.க. அரசு! என்ன அநியாயம்?

போண்டி : **ஆமாய்யா; ஒழுங்கா இருந்தா இந்த ஆட்சிக்கு எப்படி பிடிக்கும்? நடக்கிறது "தூய ஆட்சி" (?) ஆச்சே. இதுலே நியாயமாவது, அநியாயமாவது.**

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(7.11.2026)



1. தென்காசி மாவட்டம் சுரண்டை அருகே சுந்தரபாண்டியபுரம் செல்லும் சாலையில் வாழைத் தோட்டத்தில் இளம் பெண் ஒருவர் எரித்துக் கொலை....

2. சென்னையை அடுத்த திருவேற்காடு அருகே பெரிய குப்பம் பகுதியில்முன்விரோதம் கட்டிட மேஸ்திரி கத்தியால் குத்தி கொலை. வட மாநில ஆசாமி தப்பி ஓட்டம் ...

3. சென்னையை அடுத்த பாலவாக்கம் பெரியார் நகரில் கருத்து வேறுபாடு காரணமாக மனைவியை கத்தியால் குத்தி கொலை செய்த கணவன் ....

4. சென்னை திருவொற்றியூர் அருகே மாநகராட்சி கண்டைனர் யார்டில் நின்று இருந்த லாரியில் அழுகிய நிலையில் டிரைவர் பிணம்???

5. அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரத்தில் பிளஸ் டூ மாணவியிடம் ஆபாசமாக பேசி பாலியல் தொல்லை கொடுத்த அரசு மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் சிக்கினான் ...



6. சென்னை பூக்கடை அருகே பிராட்வே பகுதியில் 14 வயது சிறுமியிடம் பாலியல் தொல்லையில் ஈடுபட்ட, ரவுடி சிக்கினான்...

7. ஆவடி அருகே கள்ளக்காதலின் 15 வயது மகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்த கள்ளக்காதலன் சிக்கினான்.

8. குமரி மாவட்டம் கொல்லங்கோடு அருகே 16 வயது சிறுமிக்கு ஆசை வார்த்தை கூறி பலாத்காரம் செய்த கல்லூரி மாணவன் சிக்கினான் ....

9. சென்னை அருகே செங்குன்றத்தில் இளம் பெண்ணிடம் பாலியல் தொல்லையில் ஈடுபட்ட கூலித்தொழிலாளி சிக்கினான் ...

10. அரியலூரில் இருந்து ஜெயங்கொண்டத்திற்குச் சென்ற அரசு பேருந்தில் பயணம் செய்த வகுப்பு மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த வாலிபர் சிக்கினான்...

11. சென்னை காசிமேட்டில் இரண்டு சிறுவர்களை கடத்திச் சென்று அறையில் அடைத்து வைத்து மது குடிக்க வைத்து கொடுமைப்படுத்திய வாலிபர் சிக்கினார் ...

12. சென்னை வியாசர்பாடி மார்க்கெட் பகுதியில் தனியார் நிறுவன ஊழியர் வீட்டில் பூட்டை உடைத்து ஆறு சவரன் நகை திருட்டு ...



13. சென்னை அடுத்த தாம்பரம் சானிட்டோரியம் மேம்பாலத்தில் ஆதரவற்றோருக்கு உணவு வழங்கி கொண்டிருந்த பெண்ணின் மீது பெப்பர் ஸ்பிரேயடித்து தங்கச் சங்கிலி பறிக்க முயன்ற ஐடி நிறுவன மேலாளர் சிக்கினர் ....

14. சென்னையை அடுத்த படப்பை, ஆதனூர் பகுதியில் வீட்டின் வெளியே துணி காய போட்டு கொண்டிருந்த பெண்ணின் கழுத்தில் இருந்து ஏழு சவரன் செயின் பறிப்பு, மூன்று பேர் சிக்கினார் ....

15. தமிழ்நாட்டில் கிருஷ்ணகிரி, பூந்தமல்லி, சென்னை எழும்பூரில் நிலையம் , திருவொற்றியூர், புதுக்கோட்டை, உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சாதாரணமாக விற்பனையாகும் போதைப் பொருட்கள், பொதுமக்கள் பீதி ...

16. தாம்பரம் அடுத்த சேலையூரில் பதிவு எழுத்தர்கள் போராட்டம் , பத்திரப்பதிவுத்துறை தனியார் மயமாக்க எதிர்ப்பு ...



17. குமரியில் இருந்து கேரளத்திற்கு தொடரும் கனிமவள கடத்தல், வேடிக்கை பார்க்கும் தமிழ்நாடு அரசு...

18. விருதுநகர் தொகுதி த.வெ.க. எம்.எல்.ஏ.வை. முற்றுகையிட்ட பொதுமக்கள், போகிற இடமெல்லாம் ரீல்ஸ் போடுவதா , வாக்கு வாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ...

19. சிவகங்கை டாஸ்மாக் கடையை அகற்றக் கோரி போராட்டத்தில் பங்கேற்ற மளிகைக் கடை உரிமையாளரின் கடையில் கஞ்சா பொட்டலம் வைத்து சிக்க வைக்க முயற்சி? கடையில் கஞ்சா பொட்டலத்தை வைத்து செல்லும் சி.சி.டி.வி. காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.